**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
**&**
**இந்திய வானிலைத் துறை**
**வேளாண் காலநிலை ஆராய்ச்சிமையம், கோவை**
**ஈரோடு மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**
**(03.03.2024 முதல் 07.04.2024)**

**அறிக்கை எண் 027/2024** **தேதி.02.04.2024**

**மாநிலத்தின் கடந்தவார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 34°செ முதல் 39°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 24°செ முதல் 28°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேரவெப்பநிலை 20°செ முதல் 27°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 10°செ முதல் 13°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஆங்காங்கே பரவலாக மழை பெறப்பட்டது.

**ஈரோடு மாவட்டத்தின் கடந்த வார வானிலை**

ஈரோடு மாவட்டத்தின் 28.03.24 முதல் 01.04.24 வரையிலும் பகல்நேரவெப்பநிலை 36°செ முதல் 38°C ஆகவும் இரவுநேரவெப்பநிலை 24°C முதல் 25°C ஆகவும் காலைநேர காற்றின் ஈரப்பதம் 76 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 16 சதவிகிதமாகவும் பதிவானது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 6-12 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்குதிசையிலிருந்து தென் கிழக்கு திசைவரை பதிவானது.

**ஈரோடு மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

| கடந்த வார வானிலை (28.03.2024 முதல் 01.04.2024) | | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 07.04.2024- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 28/03 | 29/03 | 30/03 | 31/03 | 01/04 | தேதி | நாள்-1 03/04 | நாள்-2 04/04 | நாள்-3 05/04 | நாள்-4 06/04 | நாள்-5 07/04 |
| 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 0 | 0 | 0 | 0 | 0 |
| 36 | 37 | 38 | 38 | 37 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 40 | 40 | 40 | 39 | 39 |
| 24 | 25 | 24 | 24 | 25 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 26 | 26 | 25 | 25 | 26 |
| 4 | 4 | 3 | 3 | 4 | மேக மூட்டம் (ஆக்டா) | 1 | 0 | 3 | 3 | 3 |
| 72 | 76 | 64 | 60 | 67 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 60 | 60 | 60 | 60 | 60 |
| 42 | 36 | 16 | 28 | 26 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 20 | 20 | 20 | 20 | 20 |
| 10 | 9 | 12 | 8 | 6 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 8 | 6 | 8 | 6 | 8 |
| 70 | 90 | 90 | 50 | 50 | காற்று வீசும் திசை | 180 | 160 | 160 | 160 | 180 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை ஈரோடு (03.04.2024 முதல் 07.04.2024)**

வரும் நாட்களில் வானம் தெளிவாக காணப்படும். அடுத்த ஐந்து நாட்களுக்கு வறண்ட வானிலை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்சவெப்பநிலை 39°செ முதல் 40°செ ஆகவும், குறைந்தபட்சவெப்பநிலை 25°செ முதல் 26°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 60 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 20 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்று மணிக்கு 6-8 கி.மீ வேகத்தில் வீசக்கூடும். காற்று பெரும்பாலும் தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

**ஈரோடு மாவட்டத்தில் உள்ள தொகுதி வாரியாக உள்ளஅடுத்த ஐந்து நாட்களுக்கான மழையளவு**

| தேதி | அம்மாபெட் | அந்தியூர் | பவானி | பவானிசாகர் | சென்னிமலை | ஈரோடு | கோபி | கொடுமுடி | மொடக்குறிச்சி | நம்பியூர் | பெருந்துறை | சத்தியமங்கலம் | தாளவாடி | டி.என்.பாளையம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **03-04-2024** | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| **04-04-2024** | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| **05-04-2024** | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| **06-04-2024** | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| **07-04-2024** | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |

## வேளாண் அறிவுரைகள்

| | | |
|---|---|---|
| பொது அறிவுரை | | அடுத்து வரும் நாட்களில் மேற்கு மண்டல பகுதிகளில் 6 - 12 கி.மீ வேகமான காற்றுடன் பொதுவாக தெளிவான வறண்ட வானிலை எதிர்பார்க்கப்படுகிறது.<br>பகல் மற்றும் இரவு நேர வெப்பநிலை சராசரியினைவிட 1-2° கூடுதலாக உயர வாய்ப்புள்ளது. உள் மாவட்டங்களில் அதிகபட்ச வெப்பநிலை 39° செல்சியஸ் க்கு மேல் கூடுதலாக வாய்ப்புள்ளது.<br>அதே சமயம் காற்றின் ஈரப்பதம் குறைந்து வருகிறது. மண் ஈரத்தினை பொறுத்து இறவைப் பயிர்களுக்கு நீர்ப்பாசனம் செய்து பயிர் கழிவு மூடாக்கு இடவும்.<br>நீர் பாசனத்திற்கு குறைந்த அளவு தண்ணீர் இருக்கும் இடங்களில் மண் மூடாக்கு (மண்ணின் மேற்புறத்திலுள்ள 2 முதல் 3 செ மீ ஆழத்திற்கு கிளறி விடுதல்) செய்யவும். |
| கம்பு | **நிலம் தயாரித்தல்** | நிலவும் வறண்ட வானிலை கருத்தில் கொண்டு ஏப்ரல் முதல் வாரத்தில் இறவை கம்பு விதைப்பிற்காக நிலம் தயார் செய்யவும் |
| காய்கறிகள் | வளர்பருவம் | வெப்பநிலை சற்று உயர்ந்து வருவதால் காய்கறிகளில் சாறு உறிஞ்சும் பூச்சிகளின் தாக்குதல் காணப்படுகிறது. இதற்கு முன்பாதுகாப்பு நடவடிக்கையாக 5 சத வேப்பங்கொட்டை வடிகரைசலை தெளிப்பதன் மூலம் இலைசுருளும் நச்சுயிரி நோய் வருவதையும் தவிர்க்கலாம். |
| வாழை | வளர்பருவம் | பகல் மற்றும் இரவு நேர வெப்பநிலை உயர்ந்தும் மாலை நேர காற்றின் ஈரப்பதம் குறைந்தும் காணப்படுவதால் மதியம் 2 மணி முதல் 3 மணி வரை உள்ளூர் பகுதிகளில் சுழற்காற்று ஏற்பட வாய்ப்புள்ளது, எனவே 5 மாத வயதுடைய வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்கவும். |

| | | |
|---|---|---|
| மரவள்ளி | வளர்பருவம் | தற்போது நிலவும் வானிலையால் மரவள்ளி கிழங்கில் சுருள் வெள்ளை ஈ வர வாய்ப்புள்ளது. எனவே விவசாயிகள் இதனை கண்காணிக்கவும். தேவைப்பட்டால் ஒரு லிட்டர் தண்ணீருக்கு ட்ரைஅசோபாஸ் 2.மிலி அல்லது அசிபேட் 2 கி என்ற அளவில் கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம். |
| தென்னை | | கோடை காலத்தில் பெறப்படும் மழையினை வேர் பகுதியல் சேமிக்கும் வகையில் மரத்தினை சுற்றிலும் பாத்திகளை உள்நோக்கி சாய்வாக ஆழப்படுத்தவும், |
| மல்லிகை | பூக்கும் பருவம் | தற்போது நிலவும் வானிலையால் மல்லிகை, முல்லை மற்றும் மரவள்ளி கிழங்கில் சிலந்தி பூச்சிவர வாய்ப்புள்ளது. எனவே விவசாயிகள் இதனை கண்காணிக்கவும். தேவைப்பட்டால் ஒரு லிட்டர் தண்ணீருக்கு நனையும் கந்தகம் 2.5 கி அல்லது டைக்கோபால் 2 மிலி என்ற அளவில் கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம். |
| கால்நடைகள் | | உயர்ந்துவரும் வெப்பநிலை மற்றும் குறைந்து வரும் காற்றின் ஈரப்பதம் காரணமாக கால்நடைகளுக்கு வெப்பஅழுற்சி ஏற்பட வாய்ப்புள்ளதால் கால்நடை மற்றும் கோழிகளுக்கு போதுமான அளவு சுத்தமான குடிநீர் அளிக்கவும். கால்நடைக்குடில்களைச் சுற்றிலும் ஈரமான சாக்குகளை தொங்கவிடவும். கால்நடைகளை வெயில் நேரத்தில் மேய்ச்சலுக்கு விடவேண்டாம். |

## குறுஞ்செய்தி

- வெப்பநிலை சராசரியினைவிட 1-2° கூடுதலாகவும், உள் மாவட்டங்களில் 39° செல்சியஸ் க்கு மேல் கூடுதலாகவும் வாய்ப்புள்ளது. கால்நடைகளுக்கு வெப்பத்தினால் பாதிப்பு ஏற்படாமல் பாதுகாக்கவும்.

**முதன்மைஅலுவலர் (GKMS)**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை**